# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 06.08.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 11674/SCIC/2025**

திரு.G.செந்தில்குமார், - மேல்முறையீட்டாளர்
கதவு எண்.5-2-7, சங்ககிரி - ஆர்.எஸ்,
சேலம் - 637 302
Phone: 96771 71255.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ - பொது அதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
கோயம்புத்தூர் (வடக்கு) - 641 018.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **13.05.2025** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 06.06.2025 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 20.06.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 26.06.2025 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 30.07.2025 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 25.09.2025 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 30.10.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 13/05/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கோயம்புத்தூர் அவர்களுக்கு அனுப்பி, அதில் “ஜென்னி ரெசிடென்சி, 22 அவினாசி ரோடு, சிவில் ஏரோடிரம்ப் போஸ்ட், கோயம்புத்தூர் மெமோரண்டம் ஆப் அசோசியேசன் எழுத்துக்கள் தெளிவாக தெரியும்படி சான்றுடன் கையொப்பமிட்டு வழங்கவும்.” என்பன போன்று 8 (எட்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திரு.G.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி/செல்வி.ம.பிரபாவதி, மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), கோயம்புத்தூர் (வடக்கு) பதிவு மாவட்டம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு ஏற்கனவே 06/06/2025 மற்றும் 25/09/2025 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக பதில்கள் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். **ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகத் தவறியுள்ளார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 11674/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
கோயம்புத்தூர் (வடக்கு) - 641 018.

**மேல்முறையீட்டாளர்**

திரு.G.செந்தில்குமார்,
கதவு எண்.5-2-7, சங்ககிரி - ஆர்.எஸ்,
சேலம் - 637 302
Phone: 96771 71255.

RG/Sr.PC